# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 143/2021

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ராஜவேல் தேதி : 01.04.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதி தரப்பில்)

என் தகப்பனார் தற்போது நல்ல திடகாத்திரமாக தான் உள்ளாரா என்றால் இல்லை. அவருக்கு 76 வயதாகிறது உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் என் தகப்பனாருக்கு 65 வயது என்ற நிலையில் தற்போது 70 வயது தான் ஆகிறது என்றும், என் தகப்பனாருக்கு 76 வயது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிஇ படித்துள்ளேன். நான் பெங்களுரில் 25 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன். என் தகப்பனார் மோட்டார் வாகன தொழில் செய்து வந்தார். விவசாயமும் செய்து வந்தார். வாதி என்ன பரிகாரத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியும். வழக்கு சொத்தை கிரய பத்திரம் எழுதி கொடுக்கவேண்டும் என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது. கிரய ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்ட அன்று நான் உடன் இல்லை. வாதி பிரதிவாதிக்கு கடன் கொடுக்கவில்லை. சொத்தை கிரயம் பெறுவதற்காக தான் பணம் கொடுத்தார். கிரயம் பெற உள்ள சொத்தின் விஸ்தீரணம் 10 ஏககர் ஆகும். அதன் சர்வே எண்கள் மற்றும் சக்குபந்தி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகள் விவசாய பூமி என்றால் சரிதான். பிரதிவாதிகள் வழக்கு சொத்துகளில் மாமரங்கள் வைத்து விவசாயம் செய்து

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.27 15:25:28 +0530

I Additional District Judge,
Salem

வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் இன்றுவரையிலும் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். கிரய ஒப்பந்த பத்திரத்தில் என் தாயார் ஒரு சாட்சி ஆவார். பிரதிவாதி தரப்பை சேர்ந்த வீரமலை என்ற நபரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். ஒப்பந்த பத்திரத்தில் 24 மாதத்திற்குள் கிரய பாக்கி தொகையை செலுத்தி கிரயம் செய்து கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. மேற்படி 24 மாத காலத்திற்குள் வழக்கு சொத்துகளை பிரதிவாதி கிரயம் செய்து கொடுக்கவேண்டும் என்று பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துகளை விற்பனை செய்யவேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றும், அதனால்தான் மேற்படி 24 மாத கால கெடுவிற்குள் நாங்கள் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரிடம் கடன் பெறுவதற்காகதான் மேற்படி ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதி எழுதி கொடுத்தார் என்றும், என் தகப்பனாரிடம் பிரதிவாதி பெற்றிருந்த கடன் தொகை ரூ.30 லட்சத்தை என் தகப்பனாருக்கு திருப்பி கொடுத்துவிட்டார் என்றும், மீண்டும் 04.05.2019 அன்று ரூ. 3,40,000/–ஐ மட்டும்தான் பிரதிவாதி என் தகப்பனாரிடம் கடனாக பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி கடன் தொகை ரூ. 3,40,000/–ஐ திருப்பி செலுத்துவதற்காக பிரதிவாதி என் தகப்பனாருக்கு காசோலை ஒன்றை கொடுத்தார் என்றும், மேற்படி காசோலையை என் தகப்பனார் வசூலுக்கு தாக்கல் செய்து பணத்தை பெற்றுக்கொண்டார் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலை கைமாற்று கடனாக பிரதிவாதி என் தகப்பனாரிடம் பெற்றிருந்ததை திருப்பி செலுத்துவதற்காக கொடுக்கப்பட்டதாகும். உண்மையிலேயே வா.சா.ஆ–1 ஒப்பந்த பத்திரம் வழக்கு சொத்துகளை பொறுதது கிரயம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதப்பட்டிருந்தால் கிரய பாக்கி தொகை ரூ. 3,00,000/–ஐ பிரதிவாதிக்கு கொடுத்து கிரயம் செய்திருப்போம் என்றும்,

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.27 15:25:34 +0530

I Additional District Judge,
Salem

ரூ. 3,40,000/-ஐ கைமாற்று கடனாக கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதியிடம் இருந்து 13.08.2019 அன்று பணம் ரூ. 3,40,000/-ஐ பெற்றுக்கொண்டு பின்னிட்டு 09.10.2019 அன்று பிரதிவாதிக்கு தவறான சங்கதிகளுடன் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி என் தகப்பனாரை அணுகி ஏன் பணத்தை திருப்பி செலுத்திய பிறகு அறிவிப்பு அனுப்பினீர்கள் என்று கேட்டபோது வட்டி கணக்கு பார்த்துவிட்டு ஒப்பந்த பத்திரத்தை திருப்பி தருவதாக என் தகப்பனார் சொல்லி காலம் தாழ்த்தியுள்ளார் என்றால் சரியல்ல. அதன்பிறகு ஏற்கனவே பிரதிவாதியிடம் பெற்றிருந்த கையொப்பத்தை பயன்படுத்தி 19.10.2019 அன்று ரூ.2 லட்சத்தை பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக ஒப்பந்த பத்திரத்தின் பின்பகுதியில் குறிப்பினை நாங்களே தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. 18.10.2019 அன்று சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை எனது தம்பியும், எனது தகப்பனாரும் சென்றார்கள். 18.10.2019 அன்று எனது தம்பியும், எனது தகப்பனாரும் அயோத்தியாப்பட்டினம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று காத்திருந்ததாக வழக்கில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்திலும் எனது தம்பியும், எனது தகப்பனாரும் அயோத்தியாப்பட்டினம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று காத்திருந்ததாக வழக்கில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதியின் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.27 15:25:38 +0530

I Additional District Judge,
Salem